குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.

33—(*வினா எண் 14116) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

(முற்பகல் 10-20)

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை அளவிலே ஆம் என்று சொல்லி ஒருங்கிணைப்பு செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் அளிக்கும் வங்கிகளை எந்தெந்த முறையிலே ஒருங்கிணைப்பு செய்வதாக அரசு தீர்மானித்துள்ளது? அதை விளக்க முடியுமா? அப்படி ஒருங்கிணைப்பு செய்யும்போது ஏதாவது இடங்கள் விடப்பட்டு அதனால் பாதிக்கப்படும் நிலை இருக்குமானால் அவற்றைப் பொறுத்து அரசினுடைய கொள்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30—6—1987 அன்று வெளியிட்ட ஒரு ஆணையின்படி தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியையும் மற்றும் தமிழ்நாடு மாநில நிலவள வங்கியையும் இணைக்கலாம் என்று தீர்மானித்து, அதனை அமல்படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரை ஒருசில விவரங்களை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள கருத்தினை ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைக்க ஏற்ற உறுப்பினர்களுடைய பட்டியலைத் தரும்படியாகவும், குழுவின் செயல்பாடு குறித்த வான்முறை என்ன என்பதை வகுத்துத் தரும்படியாகவும் பதிவாளரிடத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. பதிவாளரிடம் இருந்து அறிக்கை

வந்ததற்குப் பிறகுதான், குழு ஆராய்ந்து முடிவு எடுத்ததற்குப் பிறகுதான், திட்டவட்டமான நிலைமைகள் ஏற்பட்டதற்குப் பிறகுதான் எதையும் செய்யமுடியுமே தவிர அவசரப்பட்டு செய்ய முடியாது. கருத்தளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நடைமுறைப்படுத்துவதற்கு இந்தப் பணிகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் முடியும்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் வழங்குவதில், முதல் தவணை கேட்டு சென்ற கோரிக்கைதாரர்களுக்கும், மனுதாரர்களுக்கும் கடன் வழங்கியிருக்கிறார்கள். இரண்டாவது தவணை, கடன் வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அதனால் குறுவை சாகுபடி செய்வதற்கு, சம்பாவுக்கு உரம் வாங்குவதற்கு எல்லாம் விவசாயிகள் சிரமப்படுகின்றார்கள். இந்த நிலைமைகளைத் தவிர்க்கின்ற வகையில், இரண்டாவது முறையாகக் கொடுக்கும் கடனைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது தவணை கடனைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்ததற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல், நான் புரிந்துகொள்ளாமல் எந்தப் பதிலையும் இங்கே கூறுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது நிலைமையைக் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், எவ்வளவு என்று கேட்டறிந்து அதற்கு என்ன பரிகாரம் தேடுவது அல்லது என்ன பதிலைச் சொல்ல முடியும் என்பதைக் கண்டறிந்து சொல்லலாம். பரிகாரம் தேட முடிந்தால் பரிகாரம் செய்ய முடியும் அல்லது பதில் சொல்ல முடியும் என்றால் பதில் சொல்ல முடியும். இரண்டில் ஒன்றை நான் தர முடியும்

விவசாயிகள் சாலைகளைக் களமாக உபயோகித்தல்

34—(* வினா எண் 3747) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் பகுதியில் விவசாயிகள் சாலைகளைக் களமாக உபயோகிப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?